இருக்கின்றவர்கள், யார், யாரை, எங்கெங்கு மாற்ற வேண்டும் எதற்காக மாற்ற வேண்டும் என்று அவர்கள் சுயநலத்தோடு எண்ணுவார்களே யானால், அந்தத் தவறான எண்ணத்திற்கு நீதி தேவதை பலிகடா ஆக்கப்படுவதை நாம் இன்று நாட்டிலே கண்கூடாகக் கண்டு வருகிறோம். மத்தியிலே உங்களது ஆட்சி விளங்குகிறது. அதன் காரணமாகத்தான் எந்த நீதிபதி எந்தக் காரியத்திற்கு உயர் நீதிமன்றத்திலே இருக்க வேண்டும், அந்த உயர் நீதிமன்ற நீதிபதி மூலமாக எந்த நீதிபதி எந்த வழக்குக்கு, கீழ் நீதிமன்றங்களிலே இருக்க வேண்டுமென்பதை மத்திய ஆட்சியிலே இருக்கின்றவர்கள் வேண்டுமென்றால் அவர்கள் எண்ணுகிற எண்ணத்தை ஈடேற்றுகிற தவறான அணுகுமுறையை மேற்கொள்ள முடியுமேயொழிய தமிழகத்தில் தற்போது நடைபெறுகின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி அதுபோன்ற பணிகளில் ஈடுபடாது, ஈடுபடவும் முடியாது. காரணம், அந்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது மையத்தை ஆளுகிற உங்களது அரசு என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் மனோஜ் பாண்டியன் அவர்கள் பேசுகிறபோது, ஒரு குறிப்பிட்ட நீதிபதி, தமிழ்நாடு சர்வீஸ் கமிஷனிலே உறுப்பினர் பொறுப்பிலே இருந்து, பின்னர் வேறு ஒரு பொறுப்பிற்கு மைய அரசாலே நியமிக்கப்பட்டு இருக்கிறார் என்றும், அப்படி ஏற்கெனவே பொறுப்பிலே இருக்கின்றவர்கள்....

7. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்களுக்குத் தேயிலைப் பாக்கெட்டுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, ஒரு அறிவிப்பைச் செய்துவிடுகிறேன். சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் தேயிலைப் பாக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன. பணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்து விடுகிறார்கள். டீயைக் குடிக்கிறபோது மட்டும் அம்மாவை நினைத்துக்கொண்டு, அவருக்கு வாழ்த்துச் சொல்லிவிட்டுக் குடியுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)